NSW GOVERNMENT

# What do I need to know if I want to appeal a suspension or expulsion?

Parent/carer information

# இடைநிறுத்தம் அல்லது வெளியேற்றம் ஒன்றிற்கு எதிராக நான் மேல் முறையீடு செய்ய விரும்பினால் நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

## பெற்றோர்/பராமரிப்பாளருக்கான தகவல்

### மேல் முறையீடு என்றால் என்ன?

முடிவு ஒன்றை மீண்டும் பரிசீலிக்குமாறு நீங்கள் கேட்கும் பொழுது அது மேல் முறையீடு என்று சொல்லப்படும்.

### இடைநிறுத்தம் அல்லது வெளியேற்றம் ஒன்றிற்கு எதிராக நான் எவ்வாறு மேல் முறையீடு செய்வது?

பாடசாலை அதிபர் நியாயமற்ற முடிவை எடுத்திருக்கிறார் என்றோ, சரியான விதிமுறை மற்றும் நடைமுறைகளை அவர் பின்பற்றவில்லை என்றோ நீங்கள் நம்பினால் இடைநிறுத்தம் அல்லது வெளியேற்றம் ஒன்றிற்கு எதிராக நீங்கள் மேல் முறையீடு செய்யலாம். மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் ஆகியோர் மேல் முறையீட்டுப் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்யலாம்.

உள்ளூர்ப்-பகுதியிலுள்ள 'கல்வி அலுவலக' த்தில் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கலாம். இந்த செயல்பாட்டு முறையினை விளங்கிக்கொள்ள உள்ளூர்ப்-பகுதி 'கல்வி அலுவலகம்' உங்களுக்கு உதவக்கூடும். முறைப்பாட்டினை எழுதுவதிலும் அவர்களால் உதவ இயலும். உள்ளூர்ப்-பகுதி 'கல்வி அலுவலக'த்தின் தொடர்பு விபரங்களை உங்களுடைய பிள்ளையின் பாடசாலையால் கொடுக்க இயலும்.

மேல் முறையீட்டைப் பற்றிய முடிவு ஒன்றை 'பணிப்பாளர், கல்வித் தலைமை' (Director, Educational Leadership) அல்லது பாடசாலைச் செயற்பாடுகளுக்கான 'நிறைவேற்றுப் பணிப்பாளர்,' (Executive Director, School Performance) மேற்கொள்வார், மற்றும் இந்த செயல்முறைக்கு 15 முதல் 20 வரைக்குமான பாடசாலை நாட்கள் எடுக்கும். மேல் முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்படும் பொழுதும், முடிவு ஒன்று மேற்கொள்ளப்படும் பொழுதும் உங்களுடன் தொடர்புகொள்ளப்படும். உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், மேல்முறையீடு சமர்ப்பிக்கப்பட்ட 'கல்வி அலுவலக'த்துடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

#### இடை நிறுத்தம் குறித்த மேல் முறையீடு ஒன்றினால் கிடைக்கும் பலன்

இடை நிறுத்தம் குறித்த மேல் முறையீடு ஒன்று சரியானது என்று காணப்பட்டால், மற்றும் முடிவெடுப்பாளர் உங்களுடைய வேண்டுகோளுடன் உடன்பட்டால், கூடிய விரைவில் உங்களுடைய பிள்ளை பாடசாலைக்குத் திரும்புவதை உறுதிப்படுத்துவதற்காகப் பாடசாலை அதிபர் உங்களுடன் தொடர்புகொள்வார். மேல் முறையீடு குறித்த முடிவானது உங்களுடைய பிள்ளையின் பதிவேட்டில் பதியப்படும், மற்றும் இந்த இடைநிறுத்தமானது உங்களுடைய பிள்ளையின் பதிவிலிருந்து நீக்கப்படும்.

இடைநிறுத்தம் குறித்த மேல் முறையீட்டிற்கு ஆதாரம் இல்லையெனில், மற்றும் முடிவெடுப்பாளர் உங்களுடைய வேண்டுகோளுடன் உடன்படவில்லையெனில், உங்களுடைய பிள்ளை ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதி வரை இடைநிறுத்தத்தில் தொடர்ந்து நீடிப்பார்.

#### வெளியேற்றம் குறித்து மேல் முறையீடு செய்வதனால் கிடைக்கும் பலன்

வெளியேற்றம் குறித்த மேல் முறையீட்டிற்கு ஆதாரம் இருந்தால், மற்றும் முடிவெடுப்பாளர் உங்களுடைய வேண்டுகோளுடன் உடன்பட்டால், உங்களுடைய பிள்ளை பாடசாலைக்குத் திரும்புவதற்காகப் பாரதூரமான பாதுகாப்புக் கரிசனை-கவலைகள் எதற்கும் தீர்வு காணவும், ஆதரவுதவிக்கான நடவடிக்கைகளை அமல்படுத்தவும் பாடசாலை அதிபர் உங்களுடன் சேர்ந்து செயலாற்ற வேண்டியிருக்கும். உங்களுடைய பிள்ளையைப் பற்றிய பதிவுகளில் மேல் முறையீடு குறித்து எடுக்கப்பட்ட முடிவு பதிவு செய்யப்படும், அத்துடன் மேற்கொள்ளப்பட்ட வெளியேற்றம் உங்களுடைய பிள்ளையைப் பற்றிய பதிவுகளிலிருந்து நீக்கப்படும்.

வெளியேற்றம் குறித்த மேல் முறையீட்டில் போதுமான ஆதாரம் இல்லை என்றால், மற்றும் முடிவெடுப்பாளர் உங்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், உங்களுடைய பிள்ளைக்கு வேறு பல விருப்பத்தெரிவுகள் இருக்கக்கூடும். உங்கள் பிள்ளையின் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான ஒரு மாற்று அமைப்பை ஏற்பாடு செய்ய அதிபர் உங்களுடன் பணியாற்றுவார்.

வெளியேற்றம் குறித்த மேல் முறையீட்டில் போதுமான ஆதாரம் இல்லை என்றால், மற்றும் உங்களுடைய பிள்ளை 17 வயதிற்கு மேற்பட்டவர் என்றால், நீங்களும் உங்கள் பிள்ளையும் படிப்பைத் தொடர்வதற்கான, அல்லது வேலை செய்யும் மாற்றத்திற்கான தெரிவுகள் என்ன என்று பார்க்கவேண்டியிருக்கும்.

### பாடசாலையிடமிருந்து என்ன தகவல்களைப் பெற முடியும்?

என்ன நடந்தது, ஏன் நடந்தது என்பது பற்றிய கூடுதல் தகவல்களை நீங்கள் பாடசாலையிடம் கேட்கலாம். எந்தவொரு முடிவுகளின் பின்னணியில் உள்ள காரணத்தையும், என்ன நடவடிக்கைகள் நடக்கும் மற்றும் உங்களுக்கு ஏதேனும் சிக்கல் இருந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை பாடசாலை உங்களுக்கு விளக்க வேண்டும்.

### முறைப்பாடு ஒன்றை நான் எப்படிச் செய்வது?

'உங்களுடைய பிள்ளைக்கான பரிந்துரைப்பு'-ஐப் பற்றிய தகவல்கள் பெற்றோர்களுக்குக் கிடைக்கும். இடைநிறுத்தம் அல்லது வெளியேற்றம் ஆகியன குறித்த மேல்முறையீட்டுச் செயல்முறையைப் பற்றி உங்களுக்குக் கரிசனை-கவலைகள் இன்னும் இருந்தால், 'முறைப்பாடு ஒன்றைச் செய்தல்' குறித்த தகவல்கள்' உங்களுக்குக் கிடைக்கும்.

பாடசாலைகளுடன் தொடர்புகொள்வது எப்படி என்பதைப் பற்றிய தகவல்கள் 'பாடசாலை சமூக சாசனத்தில்' கொடுக்கப்பட்டுள்ளன.

### தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை

நீங்கள் பாடசாலையுடன் தொடர்புகொள்ள விரும்பி, ஆங்கில மொழியில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவையை 131 450-இல் அழைத்து உங்களுக்கு என்ன மொழி தேவை என்பதைச் சொல்லி, பாடசாலையை அழைக்குமாறு தொலைபேசி இயக்குநரைக் கேளுங்கள். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக உரைபெயர்ப்பாளர் ஒருவரைத் தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.